# அறிவித்தல்

அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் உயர் நீதிமன்றத்தில் ஆட்சேபனைக்குட்படுத்தப்பட்ட "ஓமியோபதி" எனும் சட்டமூலம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்மானம் எனக்கு கிடைத்துள்ளதென்பதை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகிறேன்.

அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் விதந்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் மனுதாரர் மனுவை தாக்கல்செய்வதற்கு தவறியுள்ளதால் உயர் நீதிமன்றம் இந்த மனுவை நிராகரிப்பதாகவும் அது தொடர்பாக தீர்ப்பொன்றை வழங்குவதில்லை எனவும் தீர்மானித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தை இன்றைய கூட்ட நடவடிக்கைகள் பற்றிய அதிகார அறிக்கையில் பதிப்பிடுமாறு நான் கட்டளையிடுகின்றேன்.